**மண்முனை தென்மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 Vg;uy; 16 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 Vg;uy; 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல்கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் அது முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீண்டுவரும் செலவு விடயங்களான போட்டோ பிரதி இயந்திர திருத்தம் மற்றும் இறப்பர் முத்திரை, துடுப்பாட்ட பந்துக் கொள்வனவு போன்றவற்றுக்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா.34,170 தொகை நிலையான சொத்துக்களாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தன.

(இ) பிரதேச சபைக்குச் சொந்தமாக இருபது மோட்டார் வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மின்குமிழ்கள் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா.189,078 தொகை நிலையான சொத்தாக நிதிக்கூற்றில் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா.2,619,676 ஆகக் காணப்பட்ட போதிலும் பதவியினர் கடன் பதிவேடுகளின் படி அத்திகதியில் உள்ளவாறான மீதி ரூபா.2,776,184 ஆகக் காணப்பட்டதால் ரூபா.156,507 தொகையான வேறுபாடு காணப்பட்டுள்ளது.

(ஆ) வைப்பு பேரேட்டின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்பு மீதி ரூபா.6,327,793 ஆகக் காணப்பட்டபோதிலும் தனித்தனி வைப்புக் கணக்குகளின் கூட்டுமொத்த மீதி ரூபா.5,372,260 ஆகக் காணப்பட்டதால் ரூபா.955,532 தொகையான வேறுபாடு காணப்பட்டுள்ளது.

(இ) முற்பண பேரேட்டின்படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான முற்பண மீதி ரூபா.11,483,632 ஆக போது தனித்தனி முற்பணக் கணக்குகளின் கூட்டுமொத்த மீதி ரூபா.48,286 ஆகக் உள்ளதால் ரூபா.1,435,346 தொகை வேறுபாடு காணப்பட்டுள்ளது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) சேவையை விட்டு விலகிய மற்றும் இறந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி ரூபா.189,947 மூன்று ஆண்டுகளாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றினை அறவிடுவதற்கு 2015 யூலை 10 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட 13 ஒப்பந்தங்கள் 2010 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா.35,200 தொகையான நிறுத்தி வைத்தல் பணத்தை மீளளிப்பதற்கு இற்றை வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சான்றுகளின்மை |
|---|---|---|
| களஞ்சிய இருப்பு | 102,009 | களஞ்சியப் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| ஊழியர் பிணைவைப்பு | 2,650 | பிணைவைப்பு பெற்றுக்கொண்ட ஊழியர்களின் விபரம் |

**1.3.6 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ)) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்புப் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சபையால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

**2.1.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.8,426,849 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.2,972,227 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.5,454,622 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

**2.2 வருமான முகாமைத்துவம்**

**2.2.1 வீதவரிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை வீதவரியை அறவீடு செய்ய சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) முத்திரைக் கட்டணம்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டின் இறுதிவரை பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.8,997,026 ஆகக் காணப்பட்ட போதிலும் அவற்றில் ரூபா.6,441,411 மாத்திரமே பெறப்பட்டிருந்தது. எனவே சபையினால் பெறவேண்டிய ரூபா.2,555,615 நிலுவைத் தொகையை காணிப்பதிவாளர் நாயகத்திடம் பெற்றுக்கொள்வதற்கு இற்றை வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் வருமாறு.

| ஆண்டு | பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் | பெறப்பட்ட முத்திரைக் கட்டணம் | நிலுவை |
|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| 2010 | 731,901 | 580,251 | 151,650 |
| 2011 | 1,792,260 | 1,558,388 | 233,872 |
| 2012 | 1,854,094 | 1,596,518 | 257,576 |
| 2013 | 2,283,321 | 1,957,816 | 325,505 |
| 2014 | 2,335,450 | 748,438 | 1,587,012 |
| | 8,997,026 | 6,441,411 | 2,555,615 |

#### (ஆ) நீதிமன்ற தண்டப்பணம்

2014 ஆம் ஆண்டுக்கான நீதிமன்ற தண்டப்பண நிலுவை ரூபா.473,100 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

(அ) 2012 திசெம்பர் மாதம் தொடக்கம் இனங்காணப்படாத பெறுவனவாக ரூபா.41,500 தொகை வங்கி இணக்கக் கூற்றில் தொடர்ச்சியாக காட்டப்பட்டு வருகின்ற போது அதனை இனங்கண்டு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளிலிருந்து 2014 ஆம் ஆண்டுக்காக அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா.6,200 தொகையினை இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படாது வைப்புக் கணக்கில் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) 2010 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க பொதுநிதி சுற்று நிருபத்தின் பிரகாரம் பிரதேச சபையின் செயலாளரின் தொலைபேசிக் கட்டணம் மாதாந்தம் ரூபா.4,000 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அவரின் தொலைபேசிக்கட்டணமாக ரூபா.73,959 சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. எனவே அவரின் தொலைபேசிக்கட்டணமாக சபையினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா.25,929 தொகையை அவரின் சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

**----------------------------------------**

(அ) "USAID" நிறுவனத்தால் 2011 ஆம் ஆண்டு நன்கொடையாக வழங்கப்பட்ட "Roller" இயந்திரத்தை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக மூன்று வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் சபையின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை 2015 யூன் 23 ஆம் திகதி மேற்கொண்ட கணக்காய்வு பரீட்சியில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் உள்ள 12 கடைகளில், 03 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் 2012 ஜனவரி தொடக்கம் 2015 யூலை 10 வரை பாவணையற்றுள்ளது.

**4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்**

**----------------------------------------------------------**

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) வருமான முகாமைத்துவம்